| முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம் | |
|---|---|
| உயில்மெய்ப்பிதழ் மனு எண் – 148/18 | தேதி:21.02.2020 |
| ம.சா. - 2 | |
| பெயர் - சேகர் | வயது: 63 |
| த/பெ. - வரதராஜ் | |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்கிறேன். அது என்னுடைய சொந்த ஆட்டோதான். நான் குடியிருக்கும் வீட்டின் கதவு எண். ஏற்கனவே 515 என்று இருந்தது தற்போது அதை 113 என்று மாற்றியுள்ளார்கள். நான் குடியிருப்பது வாடகை வீட்டில்தான். நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. என் வழக்கறிஞர்தான் வரச்சொன்னார். வேலாயுதம் எனது சொந்தக்காரர் அல்ல. உயில் எழுதப்போவதாகவும் அதில் சாட்சி கையெழுத்து போட வேண்டும்என்றும் எந்த தேதியன்று வேலாயுதம் என்னை வரச்சொன்னார் என்றால் - தேதி ஞாபகமில்லை ஆனால் வருடம் 2011 ஆகும். அதனால் நேரடியாக பகல் 11.30 மணிக்கு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றுவிட்டேன். நான் அங்கு சென்றபோது ரெங்கநாதன்செட்டியார் இருந்தார். அவருடன் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அவர்களது பெயர் எனக்கு தெரியவில்லை. அந்த நபர்கள் எங்கு குடியிருந்து வருகிறார்கள் என்பதும் எனக்குத்தெரியாது. ரெங்கநாதன் செட்டியாரின் தகப்பனார் பெயர் தெரியாது. அவர் குடியிருக்கும் வீட்டின் கதவு எண் தெரியாது. நான் பகல் 11.30 மணிக்கு சென்றபோது அதற்கு முன்பாகவே பத்திரம் எழுதி தயாராக வைத்திருந்தார்கள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பது எனக்குத்தெரியாது. அதை யாரும் படித்தும் காண்பிக்கவில்லை. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு முன்பாக நான் நின்று கொண்டிருந்தேன்.

எனது பெயரை சொல்லி அழைத்தார்கள். நான் அலுவலகத்திற்கு உள் பகுதியில் சென்றேன். கையெழுத்து போட சொன்னார்கள் நான் கையெழுத்து போட்டேன். மற்ற விவரங்கள் எனக்குத்தெரியாது. அந்த உயில் பத்திரத்தை யார் எழுதியது என்பது எனக்குத்தெரியாது. உயில் எழுதப்பட்டது பத்திரத்திலா அல்லது தாளிலா என்றால் - பத்திரத்தில்தான் எழுதினார்கள். அந்த பத்திரத்தின் முத்திரை முக மதிப்பு எவ்வளவு என்று எனக்குத்தெரியாது. சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து அந்த உயில் பத்திரத்தில் யார் யாரெல்லாம் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்பதும் எனக்குத்தெரியாது. ரெங்கநாதன் காலமாகிவிட்டார். அவர் இறப்பிற்கு நான் சென்று பார்க்கவில்லை. ரெங்கநாதனின் மகன் வேலு தான் சாட்சி சொல்ல வேண்டுமென்று என்னை அழைத்தார். நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் வேலு சொல்லித்தான் எனக்குத்தெரியும். அதனால் மனுதாரர் மோகனசுந்தரமும் அவரது தகப்பனார் வேலாயுதமும் சொல்லி கொடுத்ததின் பேரில் நான் பொய் சாட்சியம் சொல்வதற்காக இன்று வந்திருக்கிறேன் என்று சொன்னால் - அது சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd./-L.Abraham Lincoln,
I Additional District Judge,
Salem.